Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 10 ( 22 - 04 - 1992 ) புதன்கிழமை ஓசை: 64

## குளிர்பான தயாரிப்பில் தடை செய்யப்பட்ட சாயம்

குளிர்பானம் தயாரிப்பதற்குக் கலக்கப்படும் ஒறேஞ் இமல்ஷன் (Orange Emulsion) என்ற சாயத்தில் தடை செய்யப்பட்ட வர்ணம் 'மெற்ரனில் இயலோ' என்ற திரவம் கலக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது 28 மில்லி லீற்றர் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் ஒறேஞ் இமல்ஷன் யாழ். நகரில் ஒரு கடையொன்றில் சந்தேகத்தின் பேரில் எடுக்கப் (6 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் விசேட செய்தியுடன் இன்று வரும் பௌத்த பிக்குகள்

## தந்தை செல்வா நினைவாக மாபெரும் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் இன உணர்வைத் தட்டி எழுப்பிய தந்தை செல்வாவின் பதினைந்தாவது ஆண்டு நினைவுதினப் பொதுக் கூட்டம் எதிர்வரும் இருபத்தாறாம் திகதி நல்லூர் கந்த சாமி கோவிலடியில் மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது

அன்றையதினம் காலை 8.00 மணிக்கு தந்தை செல்வாவின் நினைவாலயத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது மாலையில் அஞ்சலிக் கூட் (6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பாதுகாப்பில் தங்குவசதி

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை யாழ். வரவுள்ள பௌத்த பிக்குகளின் நல்லெண்ணத் தூதுக்குழு, சிறிலங்கா அரசாங்கத்தின் விடுதலைப் புலிகளுக்கான விசேட செய்தி ஒன்றையும் எடுத்துவருவதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இன்று விமானம் மூலம் பலாலி வந்து அங்கிருந்து காங்கேசன்துறை ஊடாக, தரைவழியாக யாழ்ப்பாணம் வரவுள்ள இவ் நல்லெண்ண தூதுக்குழுவினர் புலிகளின் முழுப்பாதுகாப்புடன் இங்கு தங்குவதற்கான ஏற்பாடுகள்மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## புலிகள்-இந்திய விவகாரம் பிரேமதாசா நிலைப்பாடு

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை எச்சமயத்திலும் நாடு கடத்தும் சாத்தியப்பாடு இல்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்திருப்பதாக புதுடில்லிப் பத்திரிகைகளான இந்து, இந்தியன் எக்ஸ்பிறஸ், பற்றியாட் ஆகியன செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை பேருவளை தொழில்நுட்பக் கல்லூரியைத் திறந்து வைத்துப்பேசிய சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா ''தம்பி ஒருவன் குழப்பம் பண்ணினால் அடுத்த வீட்டாரிடம் அண்ணன் அவனை ஒப்படைக்கமாட்டான். தானே திருத்த முயல்வான். இந்த ரீதியிலேயே நாமும் செயற்படுகிறோம்'' என்றார்.

இங்கு வாழும் சகல இனத்தவர்களும் சகோதரர்கள். பெரும் பான்மை சிங்களவர் அண்ணன் ஏனைய இனத்தவர் தம்பியர் என மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவிதமாக உலகிலுள்ள பெரிய நாடுகளும் சிறிய சகோதர நாடுகளுடன் நடந்து கொள்ளவேண்டும் அப்போது தான் உலக மக்கள் நீதியாக நியாயமாக சமத்துவமாக வ ழமுடியும் என்றார்.

## பிக்குகளின் விஜயத்திற்கு இராணுவம் அனுமதி

(கொழும்பு)

பௌத்தமத குருமார்குழுவினர் யாழ்ப்பாண விஜயம் மேற்கொள்வதற்கு பாதுகாப்பு படையினர் அனுமதி அளித்துள்ளனர். இவர்கள் அநுராதபுரத்திலிருந்து விமானம் மூலம் பலாலிக்கு கொண்டு வரப்படுவர் எனவும் கொழும்பில் அறிவிக்கப் பட்டுள்ளது இதற்கான பயண ஏற்பாடுகளும்மேற் கொள்ளப் பட்டுவிட்டதாக கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூறியுள்ளார்.

## ஊரடங்கு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் மன்னார்தீவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நாளை காலை (6 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் வளர்மதி



கடந்த 16 ஆம் திகதி வீரச் சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் வளர்மதி (சாந்தி செல்லத்துரை, நாகதம்பிரான் வீதி கண்ணகிபுரம் வாழைச் சேனை)

## கிழக்கில் படை மீது தாக்கு; 7ராணுவம், 1பொலிஸ்காயம்

திருக்கோணமலை மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையே மோதல் ஒன்று ஏற்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இம்மோதலில் ஏழு இராணுவத்தினர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

கிழக்கு மாகாணத்தில் வேறு ஒரு இடத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் ஒரு பொலிஸார் காயமடைந்ததாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## 5-ம் ஆண்டு புலமைப் பரிசில்; 10,000மாணவர் தோற்றுவர்

இம்மாதம் இருபத்தியாறாம் திகதியன்று ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. கடந்த வருடம்நடைபெற்ற இப்பரீட்சைக்குத் தோற்றமுடியாதிருந்த மாணவர்களின் நலன்கருதி இவ் விசேட பரீட்சை நடைபெறவுள்ளது.

இதனால் யாழ்ப்பாணப் பகுதியைச்சேர்ந்த சுமார் பத்தாயிரம் மாணவர்கள் நன்மை அடையவுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவிய சூழ்நிலையினால் இப்பரீட்சை நடத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்ட அதேசமயம் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து கொழும்புப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற வசதி செய்யப் பட்டுள்ளது என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கூறியுள்ளார்.

## 22 மீனவர்கள் உறவினரால் மீட்பு ஒருவர் பலி; மூவரை காணவில்லை

(வடமராட்சி கிழக்கு)

சிறிலங்காகடற்படைநேற்று முன் தினம் (திங்கட்கிழமை) அதிகாலை பருத்தித்துறை கடற்பிரதேசத்தில் நடத்திய வெறியாட்டத்தின் போது காணாமல் போனவர்களில் 22 பேர் கடலில் நீந்த முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த போது, படகுகளில் தேடிச் சென்ற உறவினர்களால் மீட்கப் பட்டார்கள்.

மேலும் ஒருவர் அச்சம்பவத்தின் போது மரணமாகியதாகவும் அவரது சடலத்தை தாங்கள் கண்டதாகவும், கடலில் இருந்து மீட்கப் பட்டவர்கள் தெரிவித்தார்கள்.

அத் தாக்குதலின் போது சிக்குண்ட மூவர் இன்னமும் கரை திரும்பவில்லை இவர்களும் கடலுக்குள் குதித்ததைக் கண்டதாகவும், பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை யென கரைக்கு மீட்கப்பட்டு வந்தவர்கள்தெரிவித்தார்கள்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற சம்பவத்தில் மரணமான மற்றொருவர் பிச்சை செல்லத்துரை (வயது33)என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை யாவார்.

பருத்தித்துறை முனையைச் (6ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களைத் தேட படையினர் அனுமதி மறுப்பு

(வடமராட்சி கிழக்கு)

நேற்று மூன்தினம் பருத்தித் துறைக் கடலில் இடம் பெற்ற சம்பவத்தையடுத்து காணாமல் போனவர்களைத் தேடுவதற்கு காணாமல் போனவர்களின் உறவினர்களும், கிராமிய கடற்றொழில் சங்கமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம், படையினரிடம் அனுமதியைப் பெற்றுத் தரும்படி கோரியதையடுத்து ச. தே. செ. ச. அதிகாரிகள் தொலைத் தொடர்பு கருவி மூலம் படையினரிடம் அனுமதி கேட்ட போது படை அதிகாரிகள் அனுமதி கொடுக்க மறுத்ததாக தெரிவிக்கப்பட்டது.

## மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

நேற்று முற்பகல் 11 மணியளவில் மண்டைதீவு மண்கும்பான் சிறிலங்கா இராணு (5 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புபூனைகள் விவகாரம் பாராளுமன்றில் விவாதம்

[கொழும்பு]

'கறுப்புப் பூனைகள்' எதிர்க்கட்சி ஆதரவாளர்களைக் கொலை செய்தார்கள் என்று முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம பொல வெளிப்படுத்திய தகவல் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்ஒன்றிற்குஎதிர்க் கட்சிகள் அறிவிப்பு விடுத்துள்ளன.

இது குறித்து எதிர்க்கட்சிக் கொறடா றிச்சேட் பத்திரானா முன்னறிவிப்பு கொடுத்துள்ளார். எதிர்க்கட்சிகள் அரசுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர இருப்பதாகவும் றிச்சேட்பத்திரானா தெரிவித்தார்.

## உடுகம்பொல மீது வழக்கு பொலிஸ் அதிகாரியோசனை

மாஜி பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல மீது உயர் பொலிஸ் அதிகாரிகள் அவதூறு வழக்குத் தாக்கல் செய்ய ஆலோசித்து வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கஸினோ உரிமையாளர் ஜேஜிம்மிடமிருந்து பொலிஸ் அதிகாரிகள் லஞ்சம் வாங்கினார்கள் என்று மாஜி பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல பொலிஸ் அதிகாரிகள் பெயர்ப்பட்டியல் ஒன்றை (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. முக்கியஸ்தர் கைது

(கொழும்பு)

பதின்மூன்று கொலைகள் புரிந்த ஜே. வி. பி. அமைப்பின் இராணுவப் பிரிவு முக்கியஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிசார் கூறியுள்ளனர்.

இரு பொலிசார் உட்பட பதின்மூன்று பேரைப் படுகொலை புரிந்த இவர் தெல்தெனிய பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருவாளர் வடிவேலு மகேசு

அவர்கள்

தாயின் மடியில்
05-10-1933

தாயக மடியில்
04-05-1991

திதி: 21-04-1992

ஆண்டொன்று மறைந்தாலும் ஆறவில்லை எம்துயர்
மலர்ந்து மறைந்தாலும் மறவாத உன்தொண்டு
மக்களின் மனமதிலே மாறாது காணுதையா
தீராத துயரமதில் உன்நெம்புடனே ஆறுகிறோம்.

என்றும் உங்களை நினைவுகொள்ளும்
மனைவி, மக்கள், மருமக்கள்
சகோதரங்கள், நண்பர்கள்
பேரப்பிள்ளைகள்.

மதவடி
பொலிகண்டி

(2485)

## வங்கிக் கடன் மறுப்பு

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் வங்கிக் கடன் கோரி விண்ணப்பித்த பல தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை வங்கிக்கடன் கிடைக்கவில்லையென புகாரிடப்பட்டுள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கால்நடை வளர்ப்பிற்காகவே வங்கிக்கடன் கோரப்பட்டதாகவும் ஆனால் இதுபற்றி இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென்றும் அப்புகாரில் கூறப்பட்டுள்ளது.

சுய தொழிலில் ஈடுபடுமாறும், அதற்கான உதவிகள் செய்யப்படுமென்றும் அரசாங்கத்தால் பிரசாரப் படுத்தப்பட்ட போதும் அதற்கான முயற்சிகளில் இறங்கும் போதுதமக்குஎவரும்உதவமுன்வருவதில்லையென்றும், பெரும்பாலும் புறக்கணிப்பே கடைப்பிடிக்கப் படுவதாகவும் தொழிலாளர்கள் குறை தெரிவித்துள்ளனர்.

## கோழிகளுக்கு தடுப்பூசி

கிளிநொச்சிமாவட்டத்தில், 'ரெனிக்கட்' நோய் பரவுவதைத் தடுக்குமுகமாக,கோழிகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன திருநகர், கணேசபுரம்,வட்டக்கச்சி,திருவையாறு,பெரியகுளம்,இராமநாதபுரம்,அம்பாள்நகர் ஆகிய பகுதிகளில் தடுப்பூசி போடும் வேலைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

கடந்த மாதம்1,600 கோழிகளுக்கும்,400கோழிக் குஞ்சுகளுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.இங்கு தொடர்ந்தும் கோழிகளுக்கு தடுப்பூசிகள் போடப்படவுள்ளன.

## அப்புத்தளை தோட்டத்தில் வேலை நாள் குறைப்பு

(அப்புத்தளை)

அப்புத்தளை கிளனூர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை நாட்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக இ தொ. கா. அப்புத்தளை மாவட்ட பிரதேசசபை உப தலைவர் எம். சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இம் மாதத்தில் இதுவரை எட்டு நாட்களே வேலை வழங்கப்பட்டுள்ளது என்றும், 12-ம் திகதியிலிருந்து தொடர்ந்து வேலை வழங்கப்படவில்லையென்றும் தோட்ட நிர்வாகிகள் மீது இவர் குற்றஞ் சாட்டினார்.

இந்த நிலையில் தொழிலாளர்களின் வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என தெரிவித்த அவர் இது தொடர்பாக தொழிலாளர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மொனோசைட் தோண்டுதல் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

தீவின் தென் மேற்குக் கரையோரத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட அபூர்வமான மொனோசைட் தாதுப் பொருளை வர்த்தக ரீதியில் தோண்டியெடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான வேலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த மொனோசைட் படிவம் பற்றிய முழு ஆராய்ச்சி வேலைகளும் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும், இதற்கான உதவிகள் ஐக்கிய நாடுகள் இயற்கை வளங்கள் நிதியத்தினால் வழங்கப்படவுள்ளதாகவும் லங்காபுவத் அறிவித்துள்ளது.

இந்தக் கனிவளப் படிவத்தின் பெறுமானம் இருபத்தையாயிரம் கோடி டாலர்களுக்கும் அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.


**விக்னா** கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், - யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

★ O/L ★

க.பொ. த. சாதாரணதரம்

பகல் முழுநேர வகுப்பு

ஆரம்பம்: (பிரிவு-3)
23. 04. 92

(சி-4308)


## ஓராம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்



கரும்புலி கப்டன்
சிதம்பரம்
(பெரியதம்பி சந்திரன்)

தாயின் மடியில்: 20. 12. 1972
தாயக மண்ணிற்காக: 4. 5. 1991



கரும்புலி கப்டன்
ஜெயந்தன்
(சம்புக்குட்டி பத்மநாபன்)

தாயின் மடியில்:
தாயக மண்ணிற்காக: 4. 5. 1991

04. 05. 91 அன்று வல்வைக் கடலிலே எதிரியின் போர்க் கப்பலை தகர்த்தெறிந்து வீரகாவியம் படைத்த வேங்கைகளின்
22. 04 92 அன்று ஆண்டுத் திதியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.

அம்மா, அப்பா,
அண்ணாமார், அக்காமார், தம்பி, தங்கை
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(சி-4289)

## நினைவுகூருகின்றோம்... 1992-04-22

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அனலைதீவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு காங்கேசன்துறை 'காபர் வியூ' உல்லாசவிடுதி சிறிலங்கா இராணுவ மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**தாஸ்** (கஸ்ப்பார் சூசைதாசன் - உயிலங்குளம், மன்னார்.)

**கப்டன் பவான் / ஐயா** (பொன்னம்பலம் யோககுமார் - சுதுமலை, மானிப்பாய் )

**லெப், கிர்மானி** (சிலுவைராசா ஜோண்சன் பேட்டன் - குருநகர், யாழ்ப்பாணம் )

**சுவர்ணன்** (பொன்னையா சிறிபோஸ் - சிறுவிளான்.)

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை, கும்புறுப்பிட்டிப் பகுதியில் இந்தியப் படையினர், மற்றும் தேச விரோத சக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். கிருஸ்ணா** (ஆனந்தராசா சிவராசா - கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை.)

1991 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**மதி** (தர்மராசா தயாபரன் - செம்பியன்பற்று.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4303)

தமிழக சட்டப் பேரவையின் தீர்ப்பு

# பத்திரிகை சுதந்திரத்திற்கு பலத்த அடி
# பிரபல பத்திரிகையாளர்கள் கண்டனம்

(டில்லி)

'த இலஸ்ரேட்டட் வீக்லிஒவ் இன்டியா' என்னும் ஆங்கில வார இதழின் முன்னாள் கட்டுரையாளர் கே. பி. சுனிலை தமிழக சட்டப் பேரவையின் முன் ஆஜராகும்படி தமிழக சட்டப் பேரவை விதித்துள்ள தீர்ப்பானது இந்தியாவின் பத்திரிகை சுதந்திரத் திற்கும் எண்ணங்களை வெளியிடும் சுதந்திரத்திற்கும் ஒரு பலத்த அடியாக அமையும் என்று பிரபல பத்திரிகையாளர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

கே. பி. சுனிலை தமிழக சட்டப் பேரவையில் ஆஜராகுமாறு பிறப்பித்த உத்தரவைக் கண்டித்து பல பத்திரிகையாளர்கள் அறிக்கையொன்றினை நேற்று முன்தினம் புதுடில்லியில் விடுத்தனர். இந்த அறிக்கையில் 'புரண்ட் லைன்' பத்திரிகை ஆசிரியர் என் - ராம், 'எக்னாமிக் ரைம்ஸ்' பத்திரிகை நிர்வாக ஆசிரியர் அஜித் குமார், 'ரைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகை ஆசிரியர் திலீப்பட்நாகர், 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஆசிரியர் எச். கே. துவா, 'இந்தியன் எக்ஸ்பிறஸ்' பத்திரிகையின் இணை ஆசிரியர் கிரிஸ் மேக் காட்லேகர், முதலானோர் கையொப்பமிட்டுள்ளனர்.

பத்திரிகையாளரான கே. பி. சுனிலை கைது செய்யும் படி தமிழ் நாடு சட்டப் பேரவை பிறப்பித்த உத்தரவை ரத்துச் செய்யுமாறு சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாவையும், சட்டப் பேரவையையும் இந்த அறிக்கை மூலம் பத்திரிகையாளர்கள் கேட்டுள்ளனர்.

## சுனில்வீட்டிற்குச் சென்று அ.தி.மு.க. அச்சுறுத்தல்

(சென்னை)

பத்திரிகையாளர் கே. பி. சுனில் சென்னையில் வசித்து வரும் வீட்டிற்குச் சென்று அ.இ.அ. தி.மு.க. கழகத்தொண்டர்கள் அச்சுறுத்தியதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை தமிழகத்தில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ இ.அ.தி.மு க.ஆட்சிக்கு வந்த பின்னர். ராஜரிஷி.குமுதம்,முரசு, நக்கீரன் பத்திரிகை அலுவலகங்கள் அ.தி.மு.கழக தொண்டர்களினால் தாக்கப்பட்டமைஇங்கு குறிப்பிடத்தக்கது.

## தென்னாசிய வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைக்கு அமெரிக்கா 126 மில். ஒதுக்கு

(வாஷிங்டன்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அமெரிக்க அரசாங்கம் நூற்று இருபத்தாறு மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

தென்னாசிய வேலைத்திட்டங்களுக்கென வழங்கப்பட்டுள்ள இந்நிதி இலங்கை, ஆப்கானிஸ்தான் நாடுகள் பயன்படுத்தப்படுவதோடு புதுடில்லியிலுள்ள அலுவலகத்திற்கும் ஒதுக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

தடுப்புக்காவலில் இருப்போருக்கு உதவவும், காணாமற்போனோரைத் தேடிப் பிடிப்பதிலும்,வைத்தியசேவைகளிற்கும், சர்வதேச சட்டம் பற்றிய தகவல்களைப் பரப்பவும், செஞ்சிலுவைக் கோட்பாடுகளைப் பரப்பவும் இந்நிதி பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டன் சபாநாயகர் பதவி; பெண் எம்.பி. போட்டி

இலங்கையைத் தனது இரண்டாவது வீடு என பல தடவைகள் வர்ணித்த பிரித்தானிய எம். பி யான செல்வி பேத்தி பூத்கெயின் கொமன் சபையின் சபாநாயகர் போட்டியில் ஈடுபடவுள்ளார் என பி. பி. ஸி. அறிவித்துள்ளது.

## நிபுணர் குழு நியமனம்

(கொழும்பு)

தெற்காசிய அபிவிருத்தி நிதியம் ஒன்றை அமைப்பதற்கான நிபுணர் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான யோசனையை பூட்டான் தெரிவித்திருந்தது. இந்நிதியத்தின் சாத்தியப்பாடு பற்றி ஆராயும் கூட்டம் ஒன்று பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெறுகின்றது.

## சீனாவிடம் கோரிக்கை

(டாக்கா)

பங்களாதேசத்திற்குள் வந்துள்ள ஆயிரக்கணக்கான முஸ்லிம் அகதிகளை பர்மிய இராணுவ ஆட்சியாளர்கள் மீண்டும் ஏற்றுக் கொள்வதற்கு உதவி செய்யுமாறு பங்களாதேஷ் பிரதம மந்திரி பேகம் காலிதாஸியா சீனாவைகேட்டுள்ளார்.

சீனக் கம்யூனிசக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஜான் குவாஸ் குவாவின் தலைமையிலான ஆறு பேர் கொண்ட சீனத் தூதுக் குழுவிடம்பேகம் காலிதாஸியா பேச்சு நடத்திய போது இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அகதிகள் பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் அமைதியான முறையில் தீர்ப்பதற்கு சீனா விரும்புகின்றது என்று சீனக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பர்மாவில் இருந்து இது வரை 2,25,000 க்கும் அதிகமான அகதிகள்பங்களாதேஷிற்குள் வந்திருப்பதாக பங்களாதேஷ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் விலகலுக்கு பின்னணி உண்டு

-இந்தியப் பத்திரிகைகள் ஊகம்

(புதுடில்லி)

காங்கிரஸ் உயர்மட்ட கமிட்டி உறுப்பினர்கள் பதவி விலகியமைக்கு பின்னணிக் காரணங்கள் பல இருப்பதாக புதுடில்லியிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் ஊகங்களும் சந்தேகமும் வெளியிட்டுள்ளன.

திருப்பதியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் தேர்தலொன்றின் மூலம் காங்கிரஸ்கட்சியின் உயர் மட்ட செயல் கமிட்டி (சி. டபிள்யு) தெரிவு செய்யப்பட்ட பத்து உறுப்பினர்களில் ஐவர் தத்தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர் என்பது தெரிந்ததே.

ஜிதேந்திர பிரசாத், அகமட் பட்டேல், குலாம்நபி ஆசாத், விஜயபாஸ்கரரெட்டி பல்ராம் ஜாக்கர் ஆகியோரே இப்பதவிகளை இராஜினாமாச் செய்தவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் கட்சியில் உயர் மட்ட கமிட்டியில், பழங்குடி வகுப்பினர் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள், பெண்கள் பிரதிநிதிகள் ஆகியோர் இடம் பெறுவதற்கு வழிவகுக்கும் முகமாகவே இவர்கள் தமது பதவியைத் துறந்திருப்பதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் பி. வி.நரசிம்ராவிடம் இவர்கள் தெரிவித்திருந்தனர்.

## ஆப்கான் முன்னாள் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறும் முயற்சிகள் தொடர்கின்றன

(காபூல்)

ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் நஜிபுல்லா நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுவதாக ஐ. நா. சிறப்புத் தூதுவர் பெனாட் சேவன் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அமைதி முயற்சியோடு சம்பந்தப்பட்டதாகவே தமது புறப்பாடு அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார்

இந்தப் பூசலில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருக்கும் எச்சரிக்கை விடுத்த திரு. சேவன் அவசரப்பட்டு மேற்கொள்ளும் எந்தவொரு செயலும் அமைதி முயற்சிகளை நாசப்படுத்தி விடும் எனக் கூறினார்.

அத்துடன் எல்லாத்தரப்பினரும் தத்தமது சொந்த இலட்சியப் பேரவாக்களை ஒதுக்கிவைத்து விட்டு பரவலான மற்றும் இனக் கட்டமைப்பு ஒன்றின் அடிப்படையிலமைந்த நிலையான தீர்வு ஒன்றைக்காண உதவுமாறு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார்.

## அணுஆயுதஉற்பத்தியில்ஈடுபடோம்; வட கொரியா அறிவிப்பு

(நோங்யாங்)

வடகொரியா ஒருபோதும் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடமாட்டாது என்றும் தனது அணு உலைகளை சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் பார்வையிட விரைவில் இடமளிக்க தயார் என்றும் வடகொரியா கூறியுள்ளது.

சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆளும் தொழிலாளர் கட்சி செயலாளர் கிம்யங்-சுன் இதனைத் தெரிவித்தார்.

அணு உலைகளைப் பரிசோதனை செய்வதற்கு எமது நாடு இடமளிக்கும். ஆனால் அணு ஆயுதங்களை இனி ஒரு போதும் உற்பத்தி செய்ய மாட்டோம் என்றும், சமாதான நோக்கத்திற்காகவே அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்வதென்று வட கொரியா முடிவு செய்துள்ளது என்றும் கிம்யங்-சுன் தெரிவித்தார்.

ஆனால் வடகொரியாவின் அணு ஆயுத திட்டம் தொடர்பாக பெருமளவு சந்தேகமே நிலவுகிறது என அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

## அயல்நாடுகளுடன்நல்லுறவு மனநிறைவைத் தருகிறது

- இந். பாதுகாப்பமைச்சர் சரத்பவார்

தன்னுடைய அண்டை நாடுகள் அனைத்துடனும் இந்தியா நல்லுறவைப் பேணி வருவது மனநிறைவைத் தருவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இராணுவ தளபதிகளின் ஆறு நாள் மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில் தற்போதைய அரசியல் மற்றும் ராஜீயத் துறையிலான முன் முயற்சிகள் சீனாவுடன் இருதரப்பு உறவுகளை வளர்த்துக் கொள்ள மேலும் ஊக்கமளிக்கும் எனவும் தெரிவித்தார்.

எனினும் மிகுந்த விழிப்புணர்வுடன் செயற்பட்டு கண்காணிப்புகளைத் தீவிரமாகப் பேணவேண்டியதுஅவசியம்என வும் தளபதிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்.

## நஜிபுல்லாவை பாதுகாப்பாக வெளியேற்ற கோரிக்கை

(காபூல்)

ஆப்கான் பிரதானநகரங்களின் கட்டுப்பாட்டை முஜாகிதீன் கிளர்ச்சிக்காரர்கள் பெற்றுக் கொண்டுவிட்டதாகக் கூறப்படும் இதேவேளையில் ரஷ்யா,ஐரோப்பிய சமூகநாடுகள்,ஈரான், பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் முன்னாள் அதிபர் நஜிபுல்லாவை பாதுகாப்பாக வெளியேற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் நஜிபுல்லாவின் குடும்பத்தினர் புதுடில்லியில் தங்கியுள்ள போதிலும் ஆப்கானை விட்டு வெளியேறும் முன்னாள் அதிபர் உடனடியாக எங்கு செல்வார் என்பது அறியவரவில்லை.

## ஆப்கானில் முஜாகிதீன் அரசாங்கம் ஏற்பட வாய்ப்பு

- ஐ. நா. தூதுவர்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் முஜாகிதீன் அரசாங்கம் ஒன்று ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும், ஆப்கான் தலைநகர் காபூலுக்கு வெளியே அமைதிப் பேச்சுக்களை நடத்துவதற்காக தாம் காபூலை விட்டு புறப்பட்டுச் செல்லவிருப்பதாகவும் காபூலில் இருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவர் பெனாட் சேவன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் முஜாகிதீன் அரசாங்கம் ஒன்றிற்கு பரவலான ஆதரவு இருப்பதாகவே தெரிகிறது என நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம். பேசுகையில் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் வருங்காலமும், அந்த நாட்டு மக்களின் எதிர்காலமும், அபாயத்தில் இன்னமும் இருந்து வருகின்றது எனவும் அவர் கூறினார்.

## முன்னேற்றம் இல்லாத பேச்சு வார்த்தைகள்

புதிய முஜாகிதீன் சபையொன்றைஅமைப்பதுதொடர்பாக ஆப்கானிஸ்தான் கிளர்ச்சித் தலைவர்கள் நடத்திய இன்னுமொரு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் எந்த முன்னேற்றத்தையும் எட்டாமலேயே முடிந்துபோயுள்ளது.

இதனிடையே கிளர்ச்சியாளர்கள் ஆப்கானிஸ்தானில் மேலும் சில நகரங்களை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

# தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள்

## - ஒரு நோக்கு

நேற்றைய தொடர்ச்சி

1977 ஆம் ஆண்டு முடிவில் பெருந்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் நிறைவேற்றத்தை ஆறுவருட எல்லையில் நெருக்கமான காலத்திற்குள் அடக்குவது என அரசாங்கம் முடிவு செய்தபோது, பெருந்திட்டத்தில் கண்டுள்ள முக்கிய செயல் திட்டங்களை மட்டுமே துரிதப் படுத்திய வேலைத்திட்டத்தில் அது சேர்த்தது. பெருந் திட்டத்தின்படி வடமாகாணத்தின் தென்பகுதியில் அடங்கியிருந்த I, K, J, L, M ஆகிய பிரதேசங்கள் துரித மகாவலித் திட்டத்தில் சேர்க்கப்படாமல் கைவிடப்பட்டன. ஒரு வடமத்திய மாகாணக் கால்வாய் மூலம் இப் பிரதேசங்களிலுள்ள 94268 ஹெக்டேயர் (232760 ஏக்கர்) நிலம் நீர்ப்பாசன வசதியினைப் பெற முடியும், ஒல்லாந்துப் பொறியியல் ஆலோசகர்கள் (Nedeco) இவ்வாறான ஒரு கால்வாயினை அமைப்பது தொழில் நுட்பரீதியாகச் சாத்தியமானது எனக் கூறியிருந்தபோதிலும் கூட, அரசாங்கம் இத் திட்டத்தினையும் இப் பிரதேசங்களையும் துரித மகாவலித் திட்டத்தில் புறக்கணித்திருந்தது. இவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த இப்பிரதேசங்கள் 1988 ஆம் ஆண்டு துரித மகாவலித்திட்டத்தின் சிறப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டன. 1988 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணலாறு பிரதேசம் வெலி ஓயா எனப் பெயர்மாற்றப்பட்டு, இலங்கையின் 26 ஆவது மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடனடி அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்ட பிரதேசமாக. வெலி ஓயா (L பிரதேசம்) மாவட்டம் அறிவிக்கப்பட்டது.

**சி. வரதராஜன்**

இதனைத் தொடர்ந்து இராணுவமயப்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் விரைவாக நடைபெறலாயின. 1988, 1989 ஆண்டுக் காலப் பகுதிகளில் இப் பிரதேசத்தில் 3364 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

விக்டோரியா நீர்த்தேக்கத் திட்டத்தின் தெல்தெனியாப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், துரித மகாவலித்திட்டத்தின்கீழ் நிலங்கள் வழங்கப்பட்டுக் குடியமர்த்தப் பட்டனர். இதன்படி ஏறத்தாழ 35000 மக்களை உள்ளடக்கிய 5925 குடும்பங்கள் இவ்வாறு குடியமர்த்தப்பட்டன. இவர்களில் ஏறத்தாழ 85 சதவீதத்தினர் சிங்களவர்களாவர். 6 சத வீதத்தினர் முஸ்லிம்களாகவும் 5 சத வீதத்தினர் தமிழர்களாகவும் இருந்தனர். இதிற் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், வெளியேற்றப்பட்ட சிங்கள மக்கள் அனைவரும் கிழக்கு மாகாணத்தில் மதுறு ஓயாத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப் பட்டனர். மேலும் இக் குடியேற்றங்கள் அனைத்தும் தமிழர்வாழும் கிழக்கு மாகாணப் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் வெளியேற்றப்பட்ட தமிழர்ளும் முஸ்லிம்களும் கண்டி மாவட்டத்திற்குள்ளேயே குடியமர்த்தப்பட்டனர். கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்நகர்ப்புறப் பிரதேசங்களையும் தமிழ்க் கிராமப் பிரதேசங்களையும் இணைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை. மாறாக இங்கு நடைபெறும் குடியேற்றப் பிரதேசங்களைச் சிங்களப் பிரதேசங்களோடு இணைப்பதற்கு நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்கின்றது. இதன் ஒரு கட்டமாக சிங்கள மாவட்டங்களையும் கிழக்கு மாகாண மாகாவலி அபிவிருத்திக் குடியேற்றப் பிரதேசங்களையும் இணைக்கும் வகையில் ஒரு புகையிரதப் பாதை அமைக்கும் ஒரு உத்தேசத்திட்டம்

(4)

துரித மகாவலித் திட்டத்தில் உள்ளது. ஆனால் அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் புகையிரதப் பாதைகளால் இணைக்கப்படவில்லை.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான குடியேற்றங்களில் அரசாங்கம் சிங்கள இனம் என்பதனை மட்டும் முதன்மைப்படுத்தாமல் அதனோடு பௌத்த மதம், பௌத்த கலாசாரம் என்பவற்றையும் குடியேற்றங்களோடு இணைத்தது.

''கடந்த காலங்களில் இலங்கையில் நிலவிய பெருமைமிகுந்த சிங்கள பௌத்த கலாசாரத்தினைக் காட்டும் ஒரு சான்றாக மதுறு ஓயாத் திட்டம் விளங்கும்'' என, இத் திட்டத்திற்குப் புகழாரம் சூட்டப்பட்டது மகாவலித் திட்ட அதிகாரிகள் இங்கு குடியேறிய மக்களின் பொருள் சார் செல்வத்தினை உயர்த்துவதற்கு மட்டுமன்றி அவர்களின் தெய்வீக வாழ்க்கைக்குத் தேவையான வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப் பட்டனர். பௌர்ணமி தினங்களில் ஒவ்வொரு குடும்பமும் பௌத்த மத அனுட்டானங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. (மகாவலி அபிவிருத்தி அமைச்சு-1984) துரித மகாவலித் திட்டத்தின் கீழ் B பிரதேசத்தில் 43 பௌத்த விகாரைகளும் C பிரதேசத்தில் 71 பௌத்த விகாரைகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நன்றி - தமிழீழ நோக்கு
(2, மார்ச் - 1992)

A/L 94

கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புகள்

ஆரம்பம்: 23.04.92
காலை 9.00 மணி

★ முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/4292)

தொழில் நுட்பத்தில்
புதிய சகாப்தம்

ஒலி, ஒளி உபகரணங்கள் விற்பனையும் சீர்செய்தலும்

மணிக்கூட்டு வகைகள், விற்பனையும் சீர்செய்தலும்

ஒலி, ஒளி பதிவு செய்தல்

மற்றும் உங்கள் தேவை கருதி எந்த வகை மின்சாரப் பொருட்களை வாங்குவதானாலும், விற்பதானாலும் எம்முடன் உடன்தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-

மின்வளம்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(சி-4306)

### வவுனியாவில் மழை

(வவுனியா)

கடந்த சில தினங்களாக வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் மாலைநேரங்களில் மழைபெய்துள்ளது நீண்டகால வரட்சியினால் நிலவி வந்த வெப்பமான காலநிலையிலும் இந்த மழைவீழ்ச்சியினால் வெப்பம் ஓரளவு நீங்கியுள்ளது.

### தங்கக் கடத்தல்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் சுமார் எழுபது லட்சம் ரூபா பெறுமதியுடைய நூறு தங்கப் பாளங்களைக் கண்டுபிடித்துள்ளனர். கொழும்பில் உள்ள பிரதான கம்பியூட்டர் நிலையமொன்றிற்கு அனுப்பப்பட்டிருந்த பார்சல் ஒன்றினுள் இத்தங்கப்பாளங்கள் இருந்ததாகவும், முப்பது நாட்களுக்கும்மேலாக உரிமை கோரப்படாதிருந்த இப் பார்சலை சுங்க அதிகாரிகள் சோதனையிட்டபோது தங்கப் பாளங்களைக் கண்டுபிடித்ததாகத் தெரிய வந்துள்ளது.

### பயிற்சி கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டத்தைச் சேர்ந்த 40 ஆசிரிய ஆசிரியை கட்கு இரு நாள் கருத்தரங்கும்செயலமர்வும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

உடற்பயிற்சி கல்வி அதிகாரி திரு. க. நாகமணி அவர்களால் எதிர்வரும் 29, 30 திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

ஆசிரியர்கள் விளையாட்டுப் போட்டி மத்தியஸ்தராக கடமையாற்ற ஏற்ற வகையில் செய்முறை அறிவை கொடுப்பதற்கான பயிற்சியே இதுஎன அவர் தெரிவிக்கின்றார்.

102 பாடசாலைகள் கொண்ட பண்டத்தரிப்புக் கோட்டத்தில் சுமார் 40 பேருக்கே இம்முறை மத்தியஸ்தம் வகிப்பதற்கான பயிற்சி அளிக்கப் படுகின்றது.

### வங்கிமுகாமைத்துவ பெறுபேறுகள்

(கொழும்பு)

இலங்கை வங்கியாளர் நிறுவனம் நடத்திய வங்கிமுகாமைத்துவ டிப்ளோமா பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் முதல்

### மகாப்பொல புலமைப்பரிசில் ஆயிரம்ரூபாவாக அதிகரிப்பு

ஏப்ரல் மாதம் முதல் மகாபொல புலமைப்பரிசில் மாதாந்தம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவினால் அறிவிக்கப்பட்டமைக்கு இணங்க ஏப்ரல் மாதம் அதிகரிக்கப்பட்ட தொகையான ரூபா ஆயிரம் வழங்கப்படவுள்ளதுஎன வர்த்தகவாணிப அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்.
New College of High Studies

O/L Day Classes

ஆரம்பம் - 28-04-92
[8 மணி]

O/L (சனி - ஞாயிறு)
புதிய பிரிவு ஆரம்பம்
25-4-92
காலை 6 மணி

(சி/4278)

ஓராண்டு நினைவஞ்சலி



செல்லையா
இளையதம்பி

தோற்றம்
15-2-1924

மறைவு
5-5-1991

சிரித்தமுகமும் கலகலப்பான பேச்சும்
அயராத உழைப்பும் அன்பகலா நெஞ்சமும்
ஓராண்டு சென்றாலும் எம் நெஞ்சை விட்டகலாது

ஏங்கி தவிக்கும்: மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், மைத்துனிமார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி

(2478)

## சிந்தனைக்கு

நேர்த்தியான சிறகுகள் இருப்பதால் மட்டும்
சிறந்த பறவைகள் என்று கூறிவிட முடியாது.
- ஈஸாப் மொழி -

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 22-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2303
த. பெ. எண் 65

# சிறிலங்கா இராணுவ அமைப்பினுள் நெருக்கடி

இதுவரை இல்லாதவாறு சிறிலங்கா இராணுவத் தளபதிகள் மட்டத்தில் முரண்பாடுகள் நிலவுவதாகவும் இதனால், பல தளபதிகள் பதவி விலகலாம் எனவும், கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், இராணுவத் தளபதிகள் மட்டத்தில் எழுந்துள்ள இம் முரண்பாட்டிற்கு அண்மையில் இராணுவ அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றமே காரணம் எனவும், தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், இராணுவ அதிகாரிகள் மத்தியில், எழுந்துள்ள போட்டியும், மனவிரக்தியும் தனியாக இராணுவ அமைப்பு மாற்றத்தினால் எழுந்ததல்ல. போரில் எதிர்பார்த்த வெற்றி கிட்டாமையும், பாரிய உயிரிழப்பும், பல இராணுவ உயர் அதிகாரிகள் யுத்த களங்களுக்குச் செல்ல மறுத்தமையும், அவர்கள் கொழும்பிலேயே அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மேசைக்கு மேசை மாறிக் கொண்டு இருந்தமையும் இராணுவ வட்டாரங்களில் முன்னரே பிரச்சினைகளை ஏற்படுத்தியிருந்தன. அத்தோடு, சில அதிகாரிகளே தொடர்ந்தும், களத்தில் இருக்க வேண்டியிருந்தமையும், ஒரு தொகுதி முன்னணிப் படையினரே தொடர்ந்தும் போரிட வேண்டி இருந்தமையும், இராணுவ தரப்பில் பலத்த அதிருப்தியையும், முரண்பாடுகளையும் வளர்த்திருந்தன.

இவ்வாறு சிறிலங்கா இராணுவத்திற்குள் இருந்த பிரச்சினைகளோடு அதிகார அமைப்பு மாற்றமும் சேர்ந்தே இராணுவத்திற்குள் முரண்பாடுகளை தீவிரமாக்கின. ஆனால், வெளிப்படையாக விமர்சிக்கப்படுகின்ற இக் காரணங்கள் மட்டும் சிறிலங்கா இராணுவத்திற்குள் எழுந்துள்ள நெருக்கடிகளுக்குக் காரணமல்ல. பொதுவாகவே ஓர் ஆக்கிரமிப்பு இராணுவத்தினுள் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகும்: இதுவே உலக வரலாறு புகட்டும் பாடமுமாகும்.

தேசிய உணர்வுடனும், விடுதலை வேட்கையுடனும் போராடும் அமைப்புக்களுடன் உலகில் போரிட்ட எந்த பாரிய இராணுவ அமைப்புக்களுமே வெற்றி பெற்றதில்லை. உலக முதலாம் தர வல்லரசான அமெரிக்கா, வியட்னாம் போராளிகளிடம் தோற்றது. சோவியத் இராணுவம் ஆப்கான் போராளிகளிடமும், இந்திய இராணுவம் தமிழீழத்தில் புலிகளிடமும் தோற்றன. ஆக்கிரமிப்பு கூலிப் பட்டாளங்களின் இவ்வாறான தோல்விகளுக்கு அவர்களிடம் இருந்த வளக் குறைவுகள் காரணமல்ல. அவர்களின் நோக்கத்தில் இருந்த தெளிவின்மையும், மனோதிடமின்மையுமே காரணம். இன்று சிறிலங்கா இராணுவமும் இதையே எதிர்நோக்குகின்றது.

இதனை வலியுறுத்துவது போன்று அண்மைக் காலத்தில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளும், தளபதிகளும் இராணுவத்தினருக்கு பல போதனைகளைச் செய்து வருகின்றனர். போர்க் களங்களில் உள்ள அதிகாரிகளின் நோக்கில் - இலட்சியத்தில் - தெளிவும், மன உறுதியும் இருந்தாலே புலிகளை வெற்றி பெற முடியும் என வற்புறுத்துகின்றனர். சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவும் அண்மையில் இதனை வற்புறுத்தியுள்ளார்.

இதிலிருந்தே சிறிலங்கா இராணுவம் ஓர் ஆக்கிரமிப்பு இராணுவமாக மனவுறுதியற்றதாகச் செயல்படுகின்றமை தெரிகின்றது.

ஆனால், விடுதலைப் புலிகளின் இலட்சியப் பற்றும், மனோதிடமும் இவை யாவற்றிற்கும் மேலாக அவர்களின் அர்ப்பணிப்பும் உலகம் அறிந்தது. அத்தோடு உலக விடுதலை அமைப்புக்களில் செயற்பாடு மிக்க தலைமைத்துவத்தையும் கொண்டவர்கள் விடுதலைப் புலிகள். இதனைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே உலகம் இனம் கண்டு கொண்டதாயினும், சமீபத்தில் சிறிலங்கா இராணுவ வட்டாரங்களும் ஏற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், ஆக்கிரமிப்பு நோக்கில் விரிவாக்கப்பட்ட சிறிலங்கா இராணுவம், எவ்வளவு பெரிதாக விரிவடைந்தாலும், எவ்வளவு இராணுவ தளபாடங்களை பெற்றுக் கொண்டாலும் இலட்சிய வேட்கையுடன் போராடும் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விட முடியாது. அதாவது விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் குறிப்பிட்டது போன்று 'விடுதலைப் புலிகள் ஒவ்வொருவரும் ஒரு மனித டாங்கிகள் இவர்களுக்கு சிறிலங்கா இராணுவத்தின் டாங்கிகள் ஒரு பொருட்டல்ல,' இதேவேளை, புலிகளின் அர்ப்பணிப்பு மிக்க தாக்குதல்களினால் இராணுவ தரப்பினுள் முரண்பாடுகள் இனிமேலும் தவிர்க்கக் கூடியவையும் அல்ல.

# சுதந்திரக்கட்சி உதவியை காமினி, லலித் கோரினராம்

(கொழும்பு)

லலித்அத்துலத்முதலியும், காமினி திசநாயக்காவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவைப் பெற தனித்தனியே இரகசிய முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக அரச சார்புப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக போட்டியிடுவதற்கு சிறில.சு.கட்சியினதும், சிறிமாவோ பண்டாரநாயக்காவினதும் ஆதரவைக் கோரியுள்ள இவர்கள் தாம் பதவிக்கு வந்தால் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கவிற்கு இரண்டாவது இடத்தை ஒதுக்க தயாராக இருப்பதாகவும் தனித்தனியே உத்தரவாதம் அளித்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

சிறிலங்காசுதந்திரக்கட்சியின் ஆதரவை முதலில் கோரியவரான லலித் அத்துலத் முதலி, திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கு இரண்டாம் இடம் ஒதுக்கப்படும் என்ற உறுதிமொழியை பகிரங்கமாகப் பிரகடனம் செய்யத் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தாராம்

இதனையடுத்து திருமதி சிறிமாவோ பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்து தெரிவிக்க முந்திக் கொண்ட காமினி திஸநாயக்காவும் இதே போன்ற உறுதிமொழியை அளித்தாராம். அத்துடன் அணிசேரா நாடுகளின் தலைமையை சிறிலங்காவிற்கு பெற்றுக் கொடுத்திருந்தமைக்காக திருமதி சிறிமாவோவைக் காமினிதிஸநாயக்கஅண்மையில் புகழ்ந்து பேசியுள்ளமையும் உள்நோக்கமுடையதாம்.

1988-ம் ஆண்டில் ஐ.தே. கட்சியின் வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்காக லலித்தும் காமினியும் போட்டியிட்ட நிலைமையுடன் இன்றைய அவர்களின் போட்டியிடும் நிலையும் ஒப்பிடக்கூடியதாக இருப்பதாக அரசு சார்புப் பத்திரிகை கூறியுள்ளது.

இதேவேளை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் ஏனைய தலைவர்களான ஜி.எம். பிரேமச்சந்திரா போன்றோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம், கட்சியின் தலைமையை தாரைவார்க்க இவர்கள் முற்படுவதாக குற்றம் சாட்டிவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் விஞ்ஞான சங்க முதலாம் வருட அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க முதலாம் வருட அமர்வு இந்தமாதம் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதிக மண்டபத்தில் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது என பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுத்தலைவர், பிரிவுத் தலைவர்களின் உரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியன இம் மூன்று நாளும் நடைபெறும் என்றும், இறால் வளர்ப்பு, பூச்சிக் கட்டுப்பாடு, நன்னீர் நிலைகள், கட்டிடப் பிரச்சினைகள், துவிச்சக்கரவண்டியில் போகும் போது நுரையீரலின் செயற்பாடு, யாழ்ப்பாணத்தில் வருவாய் தரும் பயிர்களின் செயற்பாடு ஆகியவை தொடர்பாக கருத்தரங்குகள் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் நா. பாலகிருஷ்ணனின் தலைமையுரையும் நடைபெறும், அங்கத்தவர்கள் அங்கத்தவர்களல்லாதவர்கள் நலன் விரும்பிகள் இதற்குச் சமுகம் தரும்படியும், பேராசிரியர் கணேசலிங்கம் கேட்டுள்ளார்.

## விவசாயம், சிறு கைத்தொழில் கூடுதல் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டுக்கான யாழ். மாவட்டத்திற்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து அதிகளவு நிதி விவசாயம், சிறுகைத்தொழில் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நேற்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே மேற்படி ஒதுக்கீடு செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. விவசாயம், சிறுகைத்தொழில் மற்றும் இவை தொடர்பான ஆய்வுப்பணிகளுக்கே சுமார் ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. (க)

## உரிமையை பறிக்கும் பணிப்பாளர் சுற்று நிருபம்

### - தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பணிப்பாளரினால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபம் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதாக உள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் சுட்டிக் காட்டியுள்ளார். இது பற்றி அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அதிபர்களோ, ஆசிரியர்களோ தனது அனுமதியின்றிப் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள், பேட்டிகள், கட்டுரைகள் என்பவற்றை வழங்கக் கூடாது எனச் சுற்று நிருபம் மூலம் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஆனால் இவ்வாறுகூறுவதன் மூலம் திணைக்களத்தில் நிலவும் ஊழல்களை சமூகத்திற்கு மறைக்கவே முயற்சிக்கப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இச் செயலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுமதிக்காது எனவும், சங்கத்தின் பொதுச் செயலாளர், த. மகாசிவம் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பணிப்பாளரால் குறிப்பிடப்பட்ட ஸ்தாபனக் கோவையின் 30ஆம் அத்தியாயத்தின் பந்தி 3.2 அதிபர்கள் ஆசிரியர்களின் 90%த்தினரைக் கட்டுப்படுத்தாது எனவும்,

விசேட பட்டதாரிகள் தவிர்ந்த ஏனைய தராதரமுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசியல் உரிமை, எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஸ்தாபனக் கோவையில் அடிப்படையிலுண்டு எனவும்,

கல்வி நிர்வாக சேவை அதிபர் தரம் 1 தவிர்ந்த ஏனைய அதிபர்கள் அனைவருக்கும் அரசியல் உரிமை, எழுத்து பேச்சுச் சுதந்திரம் உண்டு எனவும்,

தொழிற்சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் நிர்வாகிகளுக்கும் இவ்வுரிமைகளும் சுதந்திரங்களும் உண்டெனவும்,

ஸ்தாபனக் கோவையை சரியாக புரிந்து கொள்ளாது இம் மாவட்டத்திலுள்ள 500 அதிபர்களையும், 7000 ஆசிரியர்களையும் தவறாக வழிநடத்தி அவர்களின் அடிப்படை உரிமைகளையும், பேச்சு எழுத்துச் சுதந்திரங்களிலும் கை வைக்க வேண்டாமெனவும்,

90·/. மேற்பட்ட அதிபர்கள் ஆசிரியர்களின் அடிப்படை அரசியல் உரிமைகளையும், எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றைப் பறிக்கும் இச்சுற்று நிருபத்தை உடனடியாக வாபஸ் பெறும்படியும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## மீனவர்கள் மீது

வக் காவலரண்களில் இருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

நாவாந்துறைக் கடலில்மீன் பிடியில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதைஅடுத்து மீனவர்கள் தொழிலை நிறுத்தி கரை திரும்ப நேர்ந்ததெனத் தெரிய வருகிறது. (21)

## ஓய்வூதிய கொடுப்பனவு

(மண்டைதீவு)

வேலணை ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளைஇன்று (22-4-92) சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வைத்துப் பணமாக வழங்கப்படும். இதை சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவிக்கிறார். (88)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் இன்று பி.ப. மூன்று மணிக்கு நடைபெறவுள்ளது. புதிய உத்தியோகத்தர் தெரிவும் கூட்டத்தில் இடம்பெறும்

## இலங்கை வங்கி நெல்லியடி கிளை முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் 1990ஆம் ஆண்டில் சிறந்த கிளையாக நெல்லியடி இலங்கை வங்கி கிளை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது கிளையாக மானிப்பாய்க் இலங்கை வங்கிக் கிளை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டின் வடமாகாணத்தின் சிறந்த கிளையாக மானிப்பாய் இலங்கை வங்கி கிளை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது

இரண்டாவது தடவையும் பரிசுபெற்ற ஒரேயொரு இலங்கை வங்கிக் கிளை மானிப்பாய் கிளை என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியலுக்கு வர கொர்பசேவ் விருப்பம்

(டோக்கியோ)

மீண்டும் அரசியலில் பிரவேசிக்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மிகையில் கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

தாம் பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் டிகோலை இந்த விடயத்தில் பின்பற்றி அரசியலுக்கு வரப்போவதாகவும் அவர் தெரிவித்தார்

## மாதாந்த கலை நிகழ்ச்சி

இன்றுமாலை 7.30 மணிக்கு சோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவின் யாழ் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள மாவீரர் கலையரங்கில் மாதாந்த கலைநிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றவிருக்கின்றனர். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

# தீவிரவாத நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளுவோம்

## - ஜெயலலிதா

(சென்னை)

தமிழகத்தில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்களை வளர விடாது முளையிலேயே கிள்ளி எறிவதற்குத் தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

நேற்றுச் சட்டசபையில் கவன ஈர்ப்புப் பிரேரணை தொடர்பாக முதலமைச்சர் சமர்ப்பித்த அறிக்கையில், இது குறித்து மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து இதனைச் சார்ந்த அமைப்புக்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்போவதாகவும் தெரிவித்தார்.

மேலும் சென்னையில் இந்த மாதம் 2ஆம் திகதி ஒரு தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த நாற்பதுபேர் ஆர்ப்பாட்டம் செய்து தேசவிரோத சுலோகங்களை எழுப்பி ஆயுதப் புரட்சியையும் வற்புறுத்திச் செயற்பட்டார்கள். இவர்களில் இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் செல்வி ஜெயலலிதா சட்டசபையில் குறிப்பிட்டார்.

## போராட்டத்தில் மகனை இணைத்தனர்

முழங்காவிலைச் சேர்ந்த குணபாலசிங்கம் வள்ளிப்பிள்ளை தம்பதிகள் மகன் சுதாகரனை நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் பூநகரி முழங்காவில் பிரதேச செயலகத்தில் பிரதேச அ.நி. பொறுப்பாளர் திரு ஆ சௌந்தர் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

# மே தின எழுச்சிகள் ஏற்பா[டு]கள் தீவிரம்

தொழிலாளர் தினமான மேதினத்தில் மாபெரும் எழுச்சிஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேதின ஏற்பாட்டுக் கூட்டுக் குழு செய்துள்ளது. யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்தும் அணியணியாகத் திரளும் மக்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் ஊர்வலம் மருதனாமடம் சந்தியிலிருந்து ஆரம்பித்து காங்கேசன் துறை வீதி வழியாக யாழ். பல்கலைக் கழக மைதானத்தை வந்தடையவுள்ளது.

இதேவேளை யாழ். குடாநாடு முழுவதும் எழுச்சிமிகு ஏற்பாடுகளாக பதாகைகள், சுவரொட்டிகள், சுலோகங்கள் தயாரிப்பதில் தொழிற்சங்கங்கள் முனைப்புடன் செயற்படுகின்றன.

இராணுவ கெடுபிடிகளை சித்தரிக்கும் வகையிலான தற்கால போர்க்கால நிகழ்வுகளை எடுத்தியம்பும் கலை வடிவங்கள், கலை நிகழ்வுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## இன்றைய போட்டிகள்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொருபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்கு பிரிவுக்கான இன்றைய போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வட்டுக்கோட்டை வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3-30 மணிக்கு இப் போட்டி ஆரம்பமாகும்.

வடமராட்சிப் பிரிவுக்கான மற்றுமொரு போட்டியில் சென் அன்ரனிஸ் அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதவுள்ளது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 3-30 மணிக்கு இப்போட்டி நடைபெறவுள்ளது.

## 'தமிழ் அகதி' பற்றி ஓவியப் போட்டி அறிவிப்பு

அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகம் சர்வதேச ரீதியில் ஓவியப் போட்டி ஒன்றினை நடத்தவிருக்கிறது.

அவுஸ்திரேலிய அரசு அனுஷ்டிக்கவிருக்கும் அகதிகள் வாரத்தை முன்னிட்டு இந்த ஓவியப் போட்டி நடத்தப்படஇருப்பதாகவும் ''தமிழ் அகதி'' என்ற விடயத்தைக் கருப்பொருளாகக் கொண்டு ஓவியம் வரையப்பட வேண்டும் எனவும், போட்டியாளர்களுக்கு வயதெல்லை கிடையாது எனவும், தகுதியானவை என நடுவர்களால் தெரிந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் எனவும் கழகத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

போட்டி முடிவுதிகதி 25.5 92 அனுப்ப வேண்டிய முகவரி; அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகம், த பெ.124, மோர்டியாலொக் விக்டோரியா 3195. அவுஸ்ரேலிய என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்னை பூபதி நினைவு

(மட்டக்களப்பு)

தியாகச்சுடர் அன்னைபூபதியின் நினைவுதினம் மட்டக்களப்பிலும் பரவலான முறையில் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

அன்னை பூபதி நினைவாக அங்கு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தும்பன் கேணியில் அமைக்கப்பட்ட அன்னை பூபதி ஞாபகார்த்தமேடையில் வைத்து விடுதலைப்புலிகளால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அன்னை பூபதியின் நினைவு நாள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது

கடந்த 14ஆம் திகதி மட்டக்களப்பு இந்துவெளி மகாவித்தியாலய மைதானத்தில்விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் கடந்த 17ஆம்திகதி மட்டக்களப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

இக்கூட்டங்களில் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், கல்விக்குழுபொறுப்பாளர் திரு. யோகன், மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவின் உதவிப் பொறுப்பாளர் திரு. வின்சன், மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. வேந்தன், வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பொறுப்பாளர் திரு கௌசிக், போராளிகள் மாவீரர்கள் தொடர்பக பொறுப்பாளர் ஜெயா, மட்டக்களப்பு ஆய்வு நிறுவன பொறுப்பாளர் திரு. ரமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மரண அறிவித்தல்

#### செல்வி பாறுவதி வல்லிபுரம்

புலோலி மேற்கு வந்தனையை பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 328, இராமநாதபுரத்தை வதிவிடமாகக் கொண்டவருமான இராமநாதபுரம் மகா வித்தியாலய முன்னைநாள் ஆசிரியை செல்வி பாறுவதி வல்லிபுரம் 16-04-92 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற திருமதி அருந்தவநாயகம் சிதம்பரம் (இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதபுரம்), வ. ஆறுமுகம் (திக்கம்), வ தியாகராஜா (திக்கம்) ஆகியோரின் சகோதரியும், பெ. சிதம்பரம் (இளைப்பாறிய ஆசிரியர், இராமநாதபுரம்), திருமதி ஆ. நல்லம்மா (திக்கம்), திருமதி தி. கலைஞானசவுந்தரி (திக்கம்) ஆகியோரின் மைத்துனியும், திருமதி சி. சிவயோகம் (ஆசிரியை, இராமநாதபுரம் ம. வி ), சி. சிவகுமார் (சட்டத்தரணி, லண்டன்) செல்வி சி. சிவனேஸ்வரி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), சி. சிவபாலன் (உரிமையாளர், கலக்சி புகைப்படசேவை யாழ்ப்பாணம்) ஆகியோரின் சித்தியும், ஆ. சுதர்சன் (வர்த்தக பீடம், யாழ் பல்கலைக் கழகம்), செல்வி தி. சரஸ்வதி, தி. நீதிராஜா, தி. நித்தியராஜா, தி. சத்தியராஜா, சி. சிவலோகநாதன் C.T.B, கிளிநொச்சி), திருமதி இ. பாலாம்பிகை (லண்டன்) ஆகியோரின் மாமியும், செல்வி சி. அகல்யாவின் (லண்டன்) அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-04-92 ஞாயிற்றுக்கிழமை அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

328, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

தகவல் :
சி. சிவபாலன்
(பெறாமகன்)

[2490]

## குளிர்பான

பட்டு யாழ். உணவு மருந்துப் பரிசோதகர் த மகாதேவனால் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது

ஒறேஞ் இமல்ஷனில் தடைசெய்யப்பட்ட வர்ணம் கலக்கப்பட்டிருப்பதை பரிசோதனை அறிக்கை உறுதி செய்ததையடுத்து, யாழ். கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மேற்படி இமல்ஷன் உணவு மருந்துப் பரிசோதகரினால் பறிமுதல் செய்யப்பட்டன.

லண்டன்தயாரிப்பான இந்த ஒறேஞ் இமல்ஷன் யாழ்ப்பாணத்தில் அடைக்கப்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. போலியானலேபிள்களும் தயாரித்து ஒட்டப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தின்பண்டங்களுக்கு நிறம் தீட்டுவதற்குத் தடைசெய்யப்பட்ட வர்ணத்திரவங்கள் உபயோகிக்கப்படுவதனால் உணவே நஞ்சாகிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## 22 மீனவர்கள்

சேர்ந்த மத்தியாஸ் அருள் ஞானயோகம் ஆரோக்கியநாதர், வரப்பிரகாசம் ஆகிய குடும்பஸ்தர்களும் செபஸ்தியாம்பிள்ளை செக்ஸ்பியர் என்ற இளைஞருமே இதுவரை கரை திரும்பாதவராவார்கள்.

கடற்படையின் இக்கொடூரச் செயலினால், 7 படகுகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன. படகுகளை சுட்டுச்சேதமாக்கி மூழ்கடிப்பதற்கு முன்னர் படகுகளில்பொருத்தப்பட்டிருந்த அவுட்மோட்டர் இயந்திரங்களை கழற்றி கடற்படைக் கப்பலுக்குள் கயிறு கட்டி ஏற்றியதைத் தாங்கள் கண்டதாக கரை மீண்டவர்கள் தெரிவித்தனர்.

இவைகளைவிட 4 படகுகள் துப்பாக்கிச் சூட்டினால் சேதமடைந்தநிலையில்கடலுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான வலைகள்வலை உபகரணங்களும் சேதமடைந்தும் காணாமலும் போயுள்ளன. (36)

## சுவிஸில் தமிழ் வாலிபர் கொலை;

# முன்னாள் குத்துச் சண்டை சம்பியனுக்கு சிறை

(கொழும்பு)

சுவிஸில் தமிழ் வாலிபர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் குத்துச் சண்டை சம்பியன் ஒருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவருக்கு பதினெட்டு மாதசிறைத் தண்டனையும், வழக்கு மற்றும் இதர செலவுகளுக்காக நாலாயிரத்து ஐந்நூறு சுவிஸ் பிராங்க் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு

ஆறு மணி முதல் நாளை மறுதினம் காலை ஆறு மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படை தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

## தந்தை

டம் யாழ். அரியாலையூர் சுப்பிரமணியம் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இவ் அஞ்சலிக் கூட்டம் முன்னர் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெறவிருந்தது.பின்னர் நல்லூருக்கு மாற்றப்பட்டுள்ளது

## உடுகம்பொல

வெளியிட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எனத் தெரிய வருகிறது.

உடுகம்பொல பொலிஸ் உயர் அதிகாரிகள் பற்றி தெரியப்படுத்திய தகவல் தொடர்பாக விசேடபுலனாய்வுப்பிரிவு விசாரணை நடத்தி வருகிறது விரைவில் அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப் படவுள்ளதாகதெரிகிறது

க.பொ.த சாதாரணதரம்
O/L
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

A L 94 23-4-92 காலை 9.00மணி
தூவரவியல்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்
கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்
(சி/4293)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.